சுருக்கம்

தொழில் துறை – தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் – காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள திருப்பெரும்புதூர் மற்றும் அதனை ஒட்டிய திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள, உளுந்தை கிராமம் ஆகிய பகுதிகளில் சரக்காளுமை பூங்கா (Logistics Park) அமைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழில் (எம்ஐஇ.1)துறை

அரசாணை (நிலை) எண்.246

நாள்:8.10.2015
மன்மத – புரட்டாசி 21,
திருவள்ளுவர் ஆண்டு –2046

ஆணை:

29.09.2015 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110–ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் தொடர்பாக கீழ்க்காணும் தொழில் வளர்ச்சி திட்டம் குறித்து அறிவிப்பு வெளியிட்டார்கள்:

"டிரான்ஸ்போர்ட் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா (Transport Corporation of India) என்ற நிறுவனத்தின் துணை நிறுவனமான டிசிஐ DISTRIBUTION சென்டர்ஸ் லிமிடெட் என்ற நிறுவனம், சரக்காளுமை பூங்கா Logistics Park ஒன்றினை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் TIDCO-வின் வழிகாட்டுதல் மூலம் 270 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில், சுமார் 43 ஏக்கர் பரப்பளவில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள திருப்பெரும்புதூர் மற்றும் அதனை ஒட்டிய திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள, உளுந்தை கிராமம் ஆகிய பகுதிகளில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டம் 2 அல்லது 3 ஆண்டுகளில் பல்வேறு கட்டங்களில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம் சுமார் 700 நபர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாகும்".

2. மேற்காணும் தொழில் வளர்ச்சி திட்டத்தினை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் வழிகாட்டுதல் (Escort Services) மூலம் டிசிஐ DISTRIBUTION சென்டர்ஸ் லிமிடெட் நிறுவனம் குறிப்பிட்ட கால அளவிற்குள் நடைமுறைப்படுத்தவும் மற்றும் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் முன்னேற்றம் குறித்து மாதந்தோறும் அரசுக்கு அறிக்கை அனுப்புமாறும் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தினை அரசு பணிக்கிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச.வி. சங்கர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்,
டிட்கோ,
19–ஏ, ருக்மணி இலட்சுமிபதி சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.

நகல்:
தொழில் (வசெதி) துறை, சென்னை – 9.
தொழில் (அநமு.2) துறை, சென்னை – 9.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்